நகராட்சி அலுவலகம்,
விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.
நாள் 25/09/2023

## சாதரணக் கூட்டம்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதரணக்கூட்டம் எதிர்வரும் **2023ம் வருடம் செப்டம்பர் மாதம் 29 ம் தேதி வெள்ளி கிழமை காலை 10.30 மணியளவில் நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண்.1**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்கள் திரு. S.P.M.செல்வசுரேஷ்பெருமாள் அவர்கள் அளித்துள்ள கீழ்க்காணும் பொருள் மன்றத்தின் பார்வைக்கு

மாண்புமிகு தமிழநாடு முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால், குடும்பத்திற்காக வாழ்நாள் எல்லாம் ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும், பெண்களின் உழைப்புக்கு கொடுக்கும் அங்கீகாரமாக, பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக, குடும்ப தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் உரிமைத் தொகையாக மாதம் தோறும் ரூ.1000/– வழங்கப்படும் என அரசாணை வெளியிட்டும், அதனை செயல்படுத்தியமைக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் இயற்றுதல்

**அலுவலகக்குறிப்பு**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பெற்ற, மேற்கண்ட மன்றப்பொருளில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்ற மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 333 / மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**பொருள் எண்.2**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் உள்ள 21 வார்டுகளில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணி இந்நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது மேற்கண்ட தெருவிளக்குகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடன் சரி செய்ய வேண்டி, தேவையான உதிரிபாகங்கள் கொள்முதல் செய்ய வேண்டி, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2.15 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

தெருவிள்க்கு பராமரிப்பு அவசரம் மற்றும் அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், இந்நகராட்சி பகுதியில் எல்இடி விளக்குகள் மாற்றம் செய்யும் பணி முடிவடையும் வரை தெருவிளக்குகள் பராமரிக்க தேவையாக உதிரிபாகங்கள் கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண் 2033/2023/இ1

**தீர்மான எண் : 334 / தெருவிள்க்கு பராமரிப்பு அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.3**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் இந்நகர் பகுதிகள் அனைத்திற்கும் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு வழங்கக்கூடிய குடிநீரில் சுகாதாரம் கருதி, குளோரினேசன் கலக்கப்பட்டு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சி

பொதிகையடிதூய நீரேற்றுநிலையம், ஓட்டன்குளம் மற்றும் வம்பளந்தான் பாறை தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகளில் அமைந்துள்ள குளேரினசன் பிளான்ட், பழுதடைந்துள்ளதால், குடிநீரில் சீராக குளோரின் இல்லை என ஆய்வின்போது தெரியவந்ததின் அடிப்படையிலும், தற்போது மழைகாலம் துவங்க இருக்கும் நிலையில் குடிநீரில் குளோரின் அளவு சீராக உறுதி செய்ய வேண்டியது அவசியம் என்பதாலும், மேற்கண்ட பழுதடைந்த குளோரின் பிளான்டை பழுது நீக்கம் செய்ய வேண்டி , நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.20/- இலட்சத்திற்க்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொதுமக்களுக்கு வழுங்கக்கூடிய குடிநீர் அத்தியாவசியம் மற்றும் அவசியம் கருதி மேற்கண்ட பழுது நீக்கம் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 2033/2023/இ1

**தீர்மான எண் : 335 / குடிநீர் அத்தியாவசியம் மற்றும் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.4</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி வார்டு எண் 21 அம்பலவானபுரம் மெயின்ரோடு, வார்டுஎண் 18 மூன்று லேம்ப் மற்றும் வார்டு எண் 13 டாணா பகுதியல் அமைந்துள்ள பேரூந்து நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள இருக்கைகள் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், அதனை மாற்றி புதியதாக இருக்கைகள் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2.16 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட பணியின் அவசியம் கருதியும் , பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2033/2023/இ1

**தீர்மான எண் : 336 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 5</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது நிதி 2023-24 கீழ் , கீழ்க்கண்ட விவரப்படியான பணிகளுக்கு 15.09.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி கோட்டைவிளைப்பட்டி சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கு பகுதியில் புதியதாக விலங்குகள் பிறப்பு கட்டுப்பாட்டு மையம் அமைத்தல் (Animal Birth Controll Centre)<br>மதிப்பீடு ரூ. 19.00 இலட்சம்<br>ந.க.எண் 2033/2023/இ1 | திரு.கே. ராஜா<br>ஒப்பந்தக்காரர்,<br>விக்கிரமசிங்கபுரம் | 0.09%<br>மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. A,முருகன்<br>ஒப்பந்தக்காரர்,<br>கல்லிடைக்குறிச்சி | 0.14%<br>மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.கே. ராஜா, விக்கிரமசிங்கபுரம் . என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 337 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 6**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி தூய்மைபணியாளர் திரு.ஏசுதாசன், மருத்துவ இயலாமை காரணமாக 26.08.2021 விருப்பத்துடன் பணி ஓய்வு பெற்ற அன்னாரின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க கோரி தொடரப்பட்ட வழக்கு எண்:WP(MD)9507/2023 சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் அவ்வழக்கு தொடர்பாக உத்தரவு வரப்பெற்றுள்ளதற்கான வழக்கு கட்டணம் ரூ.11000/– வழங்ககோரி 18.08.2023 ல் திரு.H.ஆறுமுகம், வழக்கறிஞர் கடிதம் வரப்பெற்றுள்ளதினை தொடர்ந்து திரு.H.ஆறுமுகம், வழக்கறிஞர் கட்டணம் ரூ.11000/– னை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

. மேற்படி வழக்கு கட்டணம் ரூ.11000/– நகர்மன்ற வழக்கறிஞர் திரு.H.ஆறுமுகம் அவர்களுக்கு மன்ற முன்அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:2442/2020/எச்1)

**தீர்மான எண் : 338 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 7**

, சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 17404/2022/எம்1 நாள் 17.08.2023 ன் படி, முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படும் வாகனங்களில் பேனர் வைக்கவும் மற்றும் நகராட்சி பள்ளிகளில் பேனர் வைக்கவும் அறிவுறுத்தப்பட்டு, அதற்கான மாதிரிகளும் வரப்பெற்றுள்ளது. அதன் படி பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி மேற்கண்ட சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, பேனர்கள் பொருத்தப்பட்ட வகைக்கும், நகராட்சி பள்ளி குழந்தைகளுக்கு கலை உணவு அருந்த ஏதுவாக எவர்சில்வர் தட்டு மற்றும் நீர் குவலைகள் , பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி கொள்முதல் செய்த வகைக்கு ரூ. 91556/– மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

. மேற்படி பணியிள் அவசரம் மற்றும் அவசியம் கருதியும், சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின் படி பணி மேற்கொண்டதற்கும், செலவினத்தை இந்நகரட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 339 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 8**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் ஏற்கனவே இருந்த தமிழ்வாழ்க என்ற விளம்பர பதாகை சேதமடைந்து விட்டப்படியால், விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்கள் இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் புதியதாக தமிழ்வாழ்க என்ற விளம்பர பலகை அமைத்து தர வேண்டி கேட்டுக்கொண்டுள்ளார், அதன் படி இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் புதிய தமிழ்வாழ்க விளம்பரபலகை அமைக்க பெறப்பட்ட உள்ளுர் விலைப்புள்ளிகளின் படி, உத்தேச செலவினத் தொகை ரூ. 80000/– மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் , பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

. விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்களின் கோரிக்கையின் படி, இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் புதியதாக தமிழ் வாழ்க என்ற விளம்பர பலகை அமைக்கவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 340 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

ஓம்/– திரு.எஸ்.பி.எம்
செல்வசுரேஷ்பெருமாள்
நகர்மன்றத் தலைவர்
விக்கிரமசிங்கபுரம் நகராட்சி